DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 221 / 2015
Deposition of PW3 - திருமதி.சங்கீதா

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03.02.2025.
1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355-ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் பிறந்தது வளர்ந்தது படித்தது எல்லாம் ஜி.உசிலம்பட்டியில் என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சியம் அளித்த பாண்டியம்மாள் என் தாயார் என்றால் சரிதான். நான் திருமணம் முடிக்கும் வரை ஜி.உசிலம்பட்டியில் தான் இருந்தேன் என்றால் சரிதான்.இந்த வழக்கில் சாட்சியம் அளித்த அ.சா.1 என் தாயார் பாண்டியம்மாளின் தாயார் என்றால் சரிதான். 1 வது எதிரி ராமசாமியின் மனைவி பெயர் ஈஸ்வரி என்றாலும், ஈஸ்வரி என் அம்மாவின் உடன்பிறந்தவர் என்றாலும் சரிதான். 1 வது எதிரி என் அம்மா பாண்டியம்மாளிடம் வாங்கிய ரூ.2 லட்சத்தினையும் மகள் ஈஸ்வரிக்கு 15 பவுன் நகை போட்டதையும் என் பாட்டி கேட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. அதே போல் ராணியிடம் 6 பவுன் நகையை வாங்கியதையும் என் பாட்டி திரும்ப கேட்டார் என்பதையும் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஈஸ்வரிக்கு 15 பவுன் நகை போட்டது அவரின் திருமணத்தின் போது சீதனமாக போட்ட நகைதான் என்றால் சரிதான். என் பெரியம்மா ஈஸ்வரிக்கு திருமணம் நடைபெற்ற போது நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். என் அம்மாவிடம் 1 வது எதிரி ரூ.2 லட்சம் பணத்தினை எங்கு , எப்படி வாங்கினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் அம்மா திருப்பூரில் தனியார் மில்லில் வேலை பார்த்தார்கள் என்றால் சரிதான். அப்போது நான் , என் தங்கை சந்தியாவும் என் பாட்டி, என் பெரியம்மா, பெரியப்பாவுடன் தான் இருந்துவந்தேன் என்றால் சரிதான். அப்போது பணபிரச்சனை தவிர அவர்களுடன் சந்தோசமாக தான் வாழ்ந்துவந்தோம் என்றால் சரிதான்.

3. என்னையும், என் தங்கையையும் என் பெரியம்மா, பெரியப்பா தான் வளர்த்து படிக்க வைத்தார்கள் என்றால் சரிதான். திருப்பூரில் என் அம்மா வேலை பார்த்த போது

அந்த கம்பெனியின் ஓனர் எங்கள் வீட்டிற்கு வருவார் என்றால் சரியல்ல. என் பாட்டி மருத்துவமனையில் இருந்த போது தான் போலீசார் வந்து விசாரித்தார்கள் அதன் பின்பு வந்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என் அம்மா திருப்பூரில் இருந்து ஊருக்கு வரும் போது கம்பெனியின் ஓனர் அவருடன் வந்து போவார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் தாயாருக்கு வேறு நபருடன் பழக்கம் இருந்ததால் என் பாட்டியை துாண்டிவிட்டு எதிரிகள் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் அம்மாவின் பேச்சினை கேட்டுக்கொண்டு நான் பொய்யாக இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்தில் எங்கள் வீட்டினைச் சுற்றி பல வீடுகள் இருக்கிறது என்றால் சரிதான்.

4. சம்பவத்தின் போது இரவு 8.30 மணியளவில் வீட்டினை சுற்றி ஆட்கள் நடமாட்டம் இருந்தது என்று சொன்னால் சரிதான். சம்பவத்தின் போது சத்தம் கேட்டு ஒரு 4 -5 நபர்கள் வந்தார்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல் என் பாட்டியை எதிரிகள் அடிக்கவும் கிடையாது, அசிங்கமாக பேசவும் இல்லை, நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் அம்மாவிடம் பணம் வாங்கியதற்கான ஆதாரம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல ஆதாரம் உள்ளது. நான் வழக்கிற்காக ஆதாரம் உள்ளது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் என் அம்மாவிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் என்னை போலீசார் விசாரித்தார்கள் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் பாட்டி தனிப்புகார் தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியாது.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.02.03 16:26:03 +0530

Judicial Magistrate,
Andipatti.